**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**23 அக்டோபர் 2015 / 10 முஹர்ரம் 1436**

# கல்வியின் முக்கியத்துவம்: செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களின் பங்களிப்புகளிலிருந்து பெற வேண்டிய பாடங்கள்

اَلْحَمْدُ للهِ الَّذِي جَعَلَ الشَّمْسَ ضِيَاءً وَالْقَمَرَ نُوْرًا، وَأَنْزَلَ الْقُرْآنَ لِلْمُتَّقِيْنَ ذِكْرًا، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ صَلاَةً وَسَلاَمًا دَائِمَيْنِ إِلَى يَوْمِ تَجِدُ كُلُّ نَفْسٍ مَا عَمِلَتْ مُحْضَرًا .أَمَّا بَعْد، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமும் அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) உச்சகட்டமாக ஏற்படுத்திக் கொள்வோமாக! நாம் அனைவரும்

அல்லாஹ்வின் ”ரஹ்மத்” எனும் அருள் மற்றும் பாவமன்னிப்பு வழங்கப்படுவோமாக!

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கல்வியைத் தேடுவதற்கு இஸ்லாம் மிகுந்த முக்கியத்துவமளித்துள்ளது. திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்களில் கல்வியைக் கற்குமாறும், கல்வியைத் தேடுமாறும் அல்லாஹ் மனிதகுலத்துக்குக் கட்டளையிடு கிறான். குறிப்பாக, முஸ்லிம் சமுதாயம் சிந்திப்பதும், கற்பதும் மிகவும் அவசியம் எனக் குறிப்பிடுகிறான். கல்வியைத் தேடுமாறு வலியுறுத்தும் வசனங்களில் பின்வரும் வசனமும் ஒன்றாகும்:

أَمَّنْ هُوَ قَٰنِتٌ ءَانَآءَ ٱلَّيْلِ سَاجِدًا وَقَآئِمًا يَحْذَرُ ٱلْءَاخِرَةَ وَيَرْجُوا۟ رَحْمَةَ
رَبِّهِۦ ۗ قُلْ هَلْ يَسْتَوِى ٱلَّذِينَ يَعْلَمُونَ وَٱلَّذِينَ لَا يَعْلَمُونَ ۗ إِنَّمَا يَتَذَكَّرُ أُو۟لُوا۟
ٱلْأَلْبَٰبِ ٩

பொருள்: (இத்தகைய மனிதனின் நடத்தை சிறந்ததா அல்லது அந்த மனிதனின் நடத்தையா?) அவனோ கீழ்ப்படிந்தவனாயிருக்கின்றான்; இரவு நேரங்களில் நின்று வணங்குகின்றான், மேலும், சிரம் பணிகின்றான்; மறுமையையும் அஞ்சுகின்றான்; மேலும், தன் இறைவனின் அருளுக்கு ஆசைப்படுகின்றான். இவர்களிடம் கேளும்: “அறிந்தோரும் அறியாதோரும் சமமாக முடியுமா? அறிவுடையவர்கள்தாம் நல்லுரைகளை ஏற்கின்றார்கள்.”

(அத்தியாயம்: அஜ்ஜுமர், வசனம்: 9)

நபி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

”கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்”

(ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் இப்னு மாஜா ரஹ், இமாம் அத்-தப்ரானீ ரஹ்)

கல்வியைத் தேடுவது முஸ்லிமான ஆணுக்கு மட்டுமல்ல, முஸ்லிமான பெண்ணுக்கும் கடமையென மேற்கண்ட ஹதீது சுட்டிக் காட்டுகிறது. இஸ்லாம், பெண் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. காரணம், தாய் தான் தனது பிள்ளைகளுக்கும் தனது பரம்பரைக்கும் கல்விக்கான முதல் மூலமாக இருக்கின்றாள்.

செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் கல்வியறிவுமிக்க ஒரு பெண்ணுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் கல்வி விஷயத்தில் சமுதாயத்துக்கு குறிப்பிடத்தக்க பங்குகளை ஆற்றியுள்ளார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் இயல்பாகவே அல்லாஹ்வினால் அறிவு ஞானம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர்களை ஒரு உண்மையான ”முஃமினாஹ்” (இறை நம்பிக்கை யாளராகவும்) சிறந்த கல்விமானாகவும் உருவாக்குவதற்காக அவர்களின் தகப்பனார் செய்யிதினா அபூபக்கர் அஸ்-ஸித்தீக் (ரலி) அவர்களும் அவர்களின் அன்புமிக்க கணவர் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் மிகப் பெரிய அளவில் பங்காற்றியுள்ளார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பார்வையிலும் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் பார்வையிலும் செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களுக்கு மிகச் சிறந்த அந்தஸ்த்து இருந்தது என்பதை மறுக்க முடியாது. ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் பார்வையில் மிகச் சிறந்த அந்தஸ்த்து இருந்ததாலும், சன்மார்க்க அறிவு அவர்களிடம் ஆழமாகக் காணப்பட்டதாலும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் மரணத்துக்குப் பின் மார்க்க சம்பந்தமான சட்ட விளக்கங்களுக்கு சமுதாய மக்கள் ஆயிஷா (ரலி) அவர்களையே அணுகி வந்தார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களுடன் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு நெருக்கமான தொடர்பு இருந்ததால் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் செயல்கள், சொல் மற்றும் ஒவ்வொரு அசைவுகளையும் மிகத் துல்லியமாக அறிந்திருந்தார்கள்.

ஷைக் இப்னு சஅத் (ரஹ்) தனது ”தபகாத்” எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

”பெண்களுக்கு மத்தியில் செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களிடம் காணப்பட்ட சிறப்பம்சங்களில் ஒன்று, இறைத்தூதர்(ஸல்) அவர்களின் ஹதீதுகளை அறிவிப்பதில் அவர்கள் தனிச் சிறப்பு பெற்றிருந்ததாகும். செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கூறிய 2,210 ஹதீதுகளை அறிவித்துள்ளார்கள்”

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட விஷயங்கள் செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு மிகப் பெரிய அளவில் பங்காற்றியுள்ளதைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இதிலிருந்து நாம் பல பாடங்களைப் பெறலாம்:

பெற்றோர்களும் குடும்ப உறுப்பினர்களும் தமது பிள்ளைகளின் சிந்தனைகள், உலகக் கண்ணோட்டம் மற்றும் "அக்லாக்" (குண நலப் பண்புகளை) அமைப்பதில் மிகப் பெரிய அளவில் பங்காற்றக் கடமைப்பட்டுள்ளார்கள் என்ற உண்மையைப் புறக்கணிக்க முடியாது.

எனவே, உங்கள் பெண் மக்களை கல்விமான்களாக உருவாக்குங்கள்; அப்போது தான், அவர்கள் முன்மாதிரியான தாய்மார்களாகவும் பயிற்றுவிப்பாளர்களாகவும் ஆகுவார்கள். நாம் நமது பெண் மக்களை நன்றாக வளர்த்து, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பதானது, வருங்காலத் தலைமுறையினரைத் தயார் செய்வதற்குச் சமமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பெண் மக்களை நன்றாக வளர்த்து, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பதன் சிறப்பைப் பற்றி, குறிப்பாக, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்கள்:

ஒருமுறை ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள்: "யார் ஒருவர் மூன்று பெண் மக்களைப் பெற்று, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்து, அவர்களை நன்றாகக் கவனித்து, அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைத்தாரோ அவர் நிச்சயம் சொர்க்கம் செல்வார்" எனக் கூறிய போது, இரண்டு பெண் மக்களைப் பெற்று அவ்வாறு செய்தவருக்கும் அப்பாக்கியம் உண்டுமா? எனத் தோழர்கள் கேட்டார்கள். ஆம்! என ரசூலுல்லாஹி(ஸல்)

பதிலளித்தார்கள். ஒருவேளை, ஒரு பெண் குழந்தையைப் பெற்று அவ்வாறு செய்தவருக்கும் அப்பாக்கியம் உண்டுமா? எனக் கேட்கப்பட்டிருந்தாலும் ஆம்! என ரசூலுல்லாஹி(ஸல்) பதிலளித்திருப் பார்கள் எனச் சிலர் கருதுகிறார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மத் ரஹ்)

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ஒரு கல்வியறிவுமிக்க முஸ்லிம் பெண், தனது குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்வார். எனவே, நமது பெண் பிள்ளைகள் முறையான, உலகக் கல்வி, மார்க்கக் கல்வி ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்த கல்வியைப் பெறுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். ”இல்ம்” (கல்வி) மற்றும் ”ஈமான்” (ஓரிறை நம்பிக்கை) ஆகிய இரண்டும் ஒருவர் வெற்றி பெறுவதற்கு மிக முக்கிய அம்சங்களாகும். இம்மை, மறுமை இரண்டின் வெற்றிக்கும் பாதுகாப்புக்கும் அவை காரணமாக அமையும். கல்வியறிவின் மூலம் ஒருவர் இவ்வுலகில் வாழ்வதில் சுயமாக செயல்பட முடியும்; மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ”ஈமான்” மற்றும் ”தக்வா” (இறை பக்தி) ஆகிய இரண்டும் விலைமதிக்க முடியாத அம்சங்களாகும். காரணம், அவை நமது பிள்ளைகளை, வெளிப்படையான மற்றும் மறைமுகமான தீங்குகளை விட்டும் பாதுகாக்கும்.

ஒரு தாய், தனது பிள்ளைகளுக்கு முதல் கல்விக்கூடமாகவும் மத்ரஸாவாகவும் இருக்கின்றாள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே தான், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள், வாழ்க்கைத் துணையைத்

தேடும் போது மார்க்கப்பற்றுவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கூறியுள்ளார்கள். நபி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

"ஒரு பெண்ணை, அவளது செல்வம், அவளது பரம்பரை, அவளது அழகு, அவளது மார்க்கப்பற்று ஆகிய நான்கு காரணங்களுக்காகத் திருமணம் செய்யலாம்; எனினும், மார்க்கப்பற்றுள்ள பெண்ணைத் தேர்ந்தெடுங்கள்; அப்போது நீங்கள் வளமான வாழ்வாக வாழலாம்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

எனவேதான், பெற்றோர்கள் தமது இளைய தலைமுறையினரை, தமது பெண் மக்கள் மூலமாக சீராக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். நாம் நமது பெண் மக்களை நன்றாக வளர்க்கவும், சன்மார்க்க ரீதியில் வழிகாட்டவும், அவர்களிடம் நல்ல மதிப்பீடுகளை ஏற்படுத்தவும் ஆற்றல் பெற்று விட்டால் அப்பெண் மக்கள், அவர்களுக்குப் பின்பு வரும் தலைமுறையினரை அதே மாதிரியான நல்ல மதிப்பீடுகளுடன் வளர்க்கும் ஆற்றலைப் பெற்று விடுவார்கள். நாம் நமது பெண் மக்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பதைப் புறக்கணிக்கக் கூடாது. பெண் கல்வி முக்கியமானதல்ல; காரணம், இறுதியில் அவள் சமையலறையில் தான் பணி செய்பவளாக இருப்பாள் எனக் கருதக் கூடாது. ஒரு சில குறிப்பிட்ட இடத்தில், நேரத்தில் அல்லது காலத்தில் மட்டும் தான் பெண்களால் பங்குகளை ஆற்ற முடியும் என்பதல்ல; இதற்கு உதாரணமாக, செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களை எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் உயிருடன் இருந்த வரை அவர்களின் கல்வியும் அனுபவமும் இளைய தலைமுறையினரால் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கல்வியின் மீது ஆழமான ஆர்வம் கொண்ட ஒரு தலைமுறையினரை உருவாக்குவதற்கு நாம் பின்பற்ற வேண்டிய அம்சங்களில் இரண்டாவது, வெற்றிமிக்க ஒரு கல்வித் திட்டத்தை நாம் ஏற்படுத்துவதாகும். அத்திட்டம் அத்தலைமுறையினரிடம் அவர்களின் மிக இளம் வயதிலிருந்தே செயல்படுத்தப்பட வேண்டும். நாம் அவர்களிடம் அல்லாஹ்வின் மீதான அசைக்க முடியாத அன்பையும், ரசூலுல்லாஹி(ஸல்) மற்றும் திருக்குர்ஆன் மீதான அன்பை ஆழமாகவும் ஏற்படுத்த வேண்டும். அப்போது, இன்ஷாஅல்லாஹ், கல்வியின் மீதான அன்பு அவர்களிடம் தானாகவே ஏற்படும். நமது பிள்ளைகளின் உள்ளங்களில் உறுதியான ”ஈமான்” (ஓரிறை நம்பிக்கை) காணப்படுமெனில் அவர்கள் சிறந்த, உளப்பூர்வமான மதிப்பீடுகளுடன் வளர்வார்கள். இன்ஷாஅல்லாஹ், அப்போது அப்பெண் அல்லது ஆண் இவ்வாழ்க்கையில் காணப்படும் சவால்களையும் தடங்கல்களையும் சகிப்புத் தன்மையுடன் எதிர்கொள்வார்கள்.

நாம் ஒரு குடும்பத்தின் தலைவர், தகப்பனார், கணவர் அல்லது சகோதரர் எனும் ரீதியில், நமது குடும்ப உறுப்பினர்கள் கல்வியின் மீது மோகம் கொண்டு, அதனைத் தேடுவதற்கு அவர்களை ஆர்வப்படுத்தும் விஷயத்தில் மிகச் சிறந்த பங்குகளை ஆற்றக் கடமைப்பட்டுள்ளோம். நாம் முடிந்த அளவு, இஸ்லாமியக் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு நமது பிள்ளைகளை முறையாக அழைத்துச் செல்ல வேண்டும். நாம் நமது வீடுகளில் அதற்கான சூழ்நிலைகளை உருவாக்கலாம்; சிறிய நூலகம், படிப்பதற்கு உகந்த இடம் போன்றவற்றை வீட்டில் அமைக்கலாம். ஏதாவதொரு வேளையில், தற்கால விஷயங்களை சங்கையாக

விவாதித்துக் கொள்வதற்கான கல்வி சம்பந்தமான கலந்துரையாடல் களுக்கு ஏற்பாடு செய்யலாம். அது நமது குடும்ப உறுப்பினர்களின் கல்வி முதிர்ச்சிக்கு உதவியாக இருக்கும். மற்றவர்களின் தேவைகளைக் கவனத்தில் கொள்கின்ற, வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வதில் முதிர்ச்சியடைந்த பெரியவர்களை உருவாக்குவதற்கு இது உதவியாக இருக்கும்.

குடும்பத் தலைவர்கள் எனும் ரீதியில், நம்மிடம் அமானிதமாக ஒப்படைக்கபட்டுள்ள நமது இளைய தலைமுறையினரை நிர்வகிப்பதற்கான ஆற்றலையும் அறிவு நுட்பத்தையும் அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா நமக்கு வழங்கி அருள் புரிவானாக! நாம் இன்று அவர்களுடன் சேர்ந்து இருப்பது போல் மறுமையில் அல்லாஹ்வின் சொர்க்கத்திலும் இணைந்து வாழ்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.